புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ISSN : 2456-821X
Peer-Reviewed
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/03 - March 2023

# சமூகவியல் நோக்கில் சு.வேணுகோபாலின் படைப்புகளில் மானுடப் பண்புகள்

**ஆய்வாளர்**
**இரா.கலைச்செல்வி**
*முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்*
*தமிழாய்வுத்துறை,*
*திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி,*
*இராசிபுரம் 637 401.*

**நெறியாளர்**
**முனைவர் து.ரேணுகாதேவி**
*உதவிப்பேராசிரியர்*
*தமிழாய்வுத்துறை*
*திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி,*
*இராசிபுரம் 637 401.*

**ஆய்வுச்சுருக்கம்**

*பரந்து விரிந்த நிலப்பரப்பில் ஆறறிவு பெற்ற மனித இனமாக மானுடம் விளங்குகின்றது. உலக இனமாகவும் நாடுகளுக்குடனான இனமாகவும் மானுடத்தை வகைமை அடிப்படையில் பிரிக்கலாம். இனம் என்ற ஒற்றை நிலையில் தொடர்ந்து சமூகத்தில் உயர்ந்த பங்களிப்பை நாகரிகம் பெற்ற மனித இனம் செய்து கொண்டே உள்ளது. மனித இனம் கால மாறுபட்டாலும் வளர்நிலை அறிவியல் காரணமாகவும் நவீன தொழில்நுட்ப பயன்பாட்டின் ஆளுமைகளாலும் இலக்கியப் பனுவல்களின் பதிவுகளாலும் மானுடம் பல்வேறு பரிணாமங்களை அடைந்துள்ளதை அறிவோம். அந்த அடிப்படையில் சு.வேணுகோபாலின் படைப்புகளில் மானுடப் பண்புகள் மீதான தாக்கத்தைப் பதிவு செய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

## முன்னுரை

*மானுடம் என்ற சொல் ஒட்டுமொத்த மனித இனத்தையும் குறிப்பதாக தான் அமையும். மனித பண்புகளை வரையறுப்பது கடினம் ஆகும். ஒவ்வொரு இனக்குழு மக்களின் வாழ்வும் வெவ்வேறு வகையிலான பண்புகள், கோட்பாடுகள், வாழ்க்கை முறைகளைப் பின்பற்றி வாழ்வதுடன் தொடர்ந்து அடுத்த தலைமுறைக்கும் சொல்லிச்*

செல்லவும் முயல்கின்றனர். எவை எவ்வாறாக இருந்த போதிலும் பொதுத்தன்மையிலான வாழ்வை வைத்து மதிப்பிடும்போது, பிறருக்குத் தீங்கு செய்யாது இருப்பதுவும் அன்புகாட்டி நெறிப்படுத்துவதும் மனிதரின் முதன்மையான பண்புகளாக இடம்பெறுகிறது. இந்த அடிப்படையில் இலக்கிய கருத்தாக்கங்களோடு தோன்றிய எழுத்தாளர் சு.வேணுகோபால் ஆவார். அவரது படைப்புகளில் சமூக வெளியில் பெரிய அளவிலான மாற்றத்தைச் செய்துள்ளன என்பது ஏற்கத்தக்கதாகும். அந்த வகையில் இலக்கிய தாக்கம், அரசியல் தாக்கம், அறிஞர்களின் தாக்கம் என பல்வேறு தாக்கங்களால் சு.வேணுகோபாலின் படைப்புகள் புதிய பரிணாமத்தையும் அடைந்து கொண்டே உள்ளன எனலாம்.

**ஆய்வு அணுகுமுறை**

இவ்வாய்வில் விளக்கமுறை ஆய்வு அணுகுமுறை பின்பற்றப்பட்டுள்ளது. இதில் மானுடவியல் பற்றி சுருக்கமாகவும் சு.வேணுகோபாலின் படைப்புகளில் கூறப்பட்ட மானுடவியல் பண்புகள் பற்றி விரிவாகவும் கொடுக்கப்பட்டுள்ளது.

**மானுடவியல் தோற்றம்**

மனித இனம் பற்றிய அறிவியல் கல்வித்துறை ஆகும். இது மனித குலத்தைச் சமூகநிலை, பண்பாட்டு நிலை, உயிரியல் நிலை போன்ற வேறுபட்ட நிலைகளில் கடந்த கால மக்களையும் சமகால மக்களையும் ஆராயும் பரந்த விரிந்த இலக்குடையதாக உள்ளது.

இலக்கிய மானுடவியலின் இலக்குகள் குறித்துத் தமது கருத்துக்களை முன்வைக்கிறார் சு.வேணுகோபால். இலக்கிய மானுடவியலின் ஆய்வுப் பொருள் ஏதுவாக இருக்க வேண்டும் என்பதையும் தம் நூல்களின் வழி வரையறுக்கின்றார். அதாவது இலக்கிய மானுடவியலின் ஆய்வுப் பொருட்பரப்பினைத் தீர்மானிக்கக் கூடிய அலகு என்பது ஒரு சமூக அலகேயாகும் என்ற நோக்கில் தம்படைப்புகளில் மானுடப்பண்புகள் பற்றி எடுத்துரைப்பது நன்கு புலனாகிறது. அவ்வகையில் சமயச் சிந்தனைகள், சடங்குகள், திருவிழாக்கள், கொண்டாட்டங்கள், உறவுமுறை அமைப்புகள், பண்பாட்டு அடிப்படையிலான செயற்பாடுகள் போன்றவையும் சு.வேணுகோபாலின் படைப்புகளில் நன்கு உணர்த்தப்படுகின்றன.

**சமுதாய மானுடவியல் கூறுகள்**

சமுதாயம் என்பது ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழும் மனித இனத்தவர் தங்களின் தேவைகளை நிறைவு செய்துகொள்ள ஏற்படுத்திக் கொண்ட ஒரு கூட்டமைப்பு ஆகும். அக்கூட்டமைப்பில் வாழும் மனிதனின் நடத்தைகள், செயல்கள், பழக்கவழக்கங்கள், விதிமுறைகள், கட்டுப்பாடுகள் போன்றவற்றைக் குறிக்கும். சமுதாய முறைகள், குடும்பம், திருமணம், உறவு முறைகள், உணவு ஈட்டுதல், பண்டமாற்று

முறைகள், சமய நம்பிக்கைகள், அரசியல் மற்றும் சமூக ஒழுங்குமுறைகள் போன்றவற்றை தம் இலக்கியத்தின் மூலம் சு.வேணுகோபால் வெளிக்காட்டியுள்ளார்.

**சமூகச் சிக்கல்கள்**

சமூகச்சிக்கல் என்பது ஒரு சமூகத்தில் உள்ள பலரை பாதிக்கும் ஒரு பிரச்சினை. இது இன்னறய சமுதாயத்தில் உள்ள பொதுவான பிரச்சினைகள் மற்றும் பலர் தீர்க்க முயற்சிக்கும் ஒரு குழுவாகும். இது பெரும்பாலும் ஒரு நபரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணிகளின் விளைவாகும். இந்த வகையில் சு.வேணுகோபால் அவர்கள் தம் படைப்புகளின் வழி குடும்பம், சமுதாயம் போன்றவற்றில் நிலவும் நிகழ்வுகளை திறம்பட எடுத்துரைக்கின்றார்.

**வாழ்வியல் சூழல்**

இவருடையப் படைப்புகள் பெரும்பாலும் பெண்களின் வாழ்வியல், ஆண்-பெண் உறவுமுறை குழந்தை மனங்களின் வெளி, விவசாயம், மாறிவரும் பண்பாட்டுச் சூழல் ஆகியவற்றைப் பின்புலமாகக் கொண்டுள்ளன. இவருடைய புதினங்களில் யதார்த்த மனவெளியைச் சித்தரிக்கும் போக்கு இழையோடுவதை உணரமுடிகின்றது. ***"ஒ மொவனுக்கு ஏழு கழுத வயசாகுது.நான் ரெண்டாந்தாரமா கட்டுவேணாக்கும்.ஏன் ஒன் மகளோட பேத்திய ரெண்டு வருசம் வளர்த்து மேஜரானதும் தர வேண்டியதுதான"*** [1] என்று இயல்பான பேச்சுகளில் வாழ்வியல் சூழல் அமைக்கப்பட்டுள்ளது.

**பெண்களின் சூழல்**

சு.வேணுகோபால் அவர்கள் பெண்களின் வாழ்வியல் வெளிகுறித்த உரையாடல்களாகச் சில படைப்புகளை முன்னிறுத்துகிறார். வீட்டுவேலைகளில் பெண் உழைத்துக் கொண்டே இருக்க ஆணின் குடும்ப பொறுப்பு எதுவாக இருக்கிறது என்ற கேள்வி, இரவு மட்டும் பெண்ணை அணுகுவதாக அமைகின்றது. ***"இதுக்கு மட்டும்தான் நீயா..."*** [2] எனக் கேலியாகச் சிரிப்பது, அவள் சிரிப்பின் ஊடாக வெளிப்படும் வலி அன்றாட நடைமுறை வாழ்வின் ஆழமான பதிவாகும்.

**உறவுமுறை சிக்கல்கள்**

ஆண், பெண் உறவுமுறை சிக்கல்களை முன்னிறுத்தி நகரும் கதைகளில் உள்ளிருந்து உடற்றும் பசி வாசகருக்கு ஆழமான அதிர்ச்சி அளிக்கக்கூடியது. தாய் தந்தையற்ற குடும்பத்தில் நான்கு தங்கைகளுக்காகச் சொந்த வாழ்க்கையைத் துறந்து ஒவ்வொருவரையும் அண்ணன் கரையேற்றுகிறான். மூன்று தங்கைகளுக்கும் திருமணமான நிலையில் நான்காவது தங்கைக்குக் குடும்பப் பொறுப்பு வந்த சேர்கிறது. ஒரு நாள் இரவில் அண்ணனின் கை வந்து தீண்ட அதிர்ந்து மிரளும் அவளிடம் அவன் கேட்கிறான், ***"அக்கா அவங்க ஒங்கிட்ட வேற ஒன்னும் சொல்லலையா..."*** [3] என்று ஒழுக்க அதிர்ச்சிக்கு அப்பால்

செல்லக்கூடிய அந்த வாழ்க்கையில் உள்ள பரிதாபமான யதார்த்ததை உணரும் சூழல் வலிமிகுந்தது என்பதை இவரது கதைகள் வழி உணர இயலுகிறது.

**வறுமையும் இயலாமையும்**

சமுதாயம் எத்தனை வளர்ச்சி நிலையை அடைந்தாலும் ஏழ்மை நிலையில் வாழும் மக்கள் இன்றளவும் அதே நிலையிலேயே உள்ளனர். அவ்வகையில் புத்துயிர்ப்பு எனும் சிறுகதையில் ஒருபுறம் பிள்ளைத்தாய்ச்சியான மனைவி. இன்னொருபுறம் கன்றீனுவதற்காகக் காத்திருக்கும் வீட்டுப்பசு. முதல் ஈத்தில் பதினேழு லிட்டர் பால் கறந்த பசு இரண்டாவது ஈத்தில் அதற்குக் குறையாமல் கறக்கத் தொடங்கிவிட்டால் தான் பட்டத் துன்பம் எல்லாம் போய்விடும் என்ற எண்ணத்தில் புல்லுக்கும் வைக்கோலுக்கும் அலைவதையே வாழ்க்கையாகக் கொண்டிருக்கிறான். விலைக்குக் கூட அவனால் வைக்கோலை வாங்க முடியவில்லை. ஒருநாள் முழுவதும் அலைந்து திரிந்தும் வெறும் கையோடு திரும்ப நேர்கிறது. பசியோடு பசு நிலைகொள்ளாமல் தவிப்பதை அவனால் நேருக்கு நேர் பார்க்க முடியவில்லை. ***"எங்கேயும் தீவனம் கெடைக்கல சாந்தா... நெறடிசனமாடு காலையில் இருந்து கொலை பட்டினியா நிக்கிது, ஐயோ...."*** [4] என்று தன்னையே நொந்துகொள்கிறான். பின்பு ஒரு வேகத்தில் நள்ளிரவில் யாருக்கும் தெரியாமல் கவுண்டர் வீட்டு தோட்டத்திற்குச் சென்று வைக்கோல் போரில் வைக்கோலைத் திருடி எடுத்துவர முயற்சி செய்தபோது பிடிபட்டு உதைபடுகிறான். அந்த அவமானத்தில் பூச்சிக்கொல்லியை எடுத்துக் குடித்துவிட்டு தற்கொலை செய்து கொள்ள முயற்சி செய்கிறான். அப்போது தான் அவன் மனைவிக்குப் பிரசவ வலி வந்து ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுக்கிறாள். இவ்வாறு பாசப் போராட்டத்தையும் பசிப் போராட்டத்தையும் ஒரே கோட்டில் கொண்டு வந்து சித்தரிக்கும் விதம் ஆசிரியரின் திறமைக்குச் சான்றாகின்றது.

**ஆதரவற்ற நிலை**

முதியவர்கள் தங்கள் மகன்களால் வஞ்சிக்கப்படும் நிலையில் கடைசிக் காலத்தில் உணவும் கவனிப்பும் மரியாதையும் அற்று வாழும் நிலை குறித்து வெவ்வேறு கோணங்களில் பதிவு செய்துள்ளார். தள்ளாத வயதில் கூலி வேலை, சுடுசொற்கள், ஒருவாய் கஞ்சிக்கு மகனிடம் மற்றவர்கள் வழியாகச் சிபாரிசு தேடல் என அவர்கள் வாழ்க்கை அலைக்கழிக்கப்படுகிறது.

இவருடைய படைப்புகளில் குழந்தைகள் சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். கதைகளில் அன்பு வறண்ட இடங்களில் மாற்றாகக் குழந்தைகளே உள்ளனர் என்பதைத் தமது கதைகளில் பல இடங்களில் உணர்த்தி உள்ளார். மேலும் கைவிடப்பட்ட நிலத்தில் போராடும் விவசாயிகளின் நிலையையும் எடுத்துரைக்கின்றார்.

**விளையாட்டு**

வீரபாண்டி ஆடுகளத்தின் முடிசூடா மன்னன் வடிவேல். ஐந்தே முக்காலடி உயரம், எல்லா விளையாட்டிற்கும் பொருத்தமாக அமைந்திருந்தது. இந்த உடம்பு எதற்கு உருவெடுத்திருக்கிறது என்று கண்டு கொள்வது தான் எளிய ஞானம். வடிவேல் அப்படிக் கண்டுகொண்டு விளையாட்டைத் தேர்ந்தவனல்ல, விளையாடினான். அவன் ஆடும் ஆட்டங்களுக்கு வெகுவாக வெகுமதிகள் வந்தன. முழுத்திறமையையும் அதற்காகவே சமர்ப்பித்தான் என்று அவனாலேயே சொல்ல முடியாது. தேனி மாவட்டத்திலேயே பிரசித்தி பெற்ற கபடிக்குழு வீரபாண்டியில் இருந்ததால் அதில் கலந்தாடும் வாய்ப்பு இயல்பிலேயே அமைந்தது. கல்லூரியில் சேர்ந்தபின்தான் கபடி மீது ஒரு கனவு எழுந்தது. ***"வடிவேல் எறங்குனான்னா பின்ன எவன் ஜெயிக்க முடியும்?"*** [5]என்று பெண்கள், ஓட்டத்தைப் பார்த்து விட்டு வீடுகளுக்குப் போகும் போது சொல்லிக் கொண்டே போவார்கள். இவ்வாறு வீர விளையாட்டான கபடியாட்டம் பற்றி ஆட்டம் எனும் குறுநாவலில் குறிப்பிட்டுள்ளார். ஆடாதவர்களுக்கு வாழ்க்கையில்லை. வாழ்க்கையில் ஆடாதவர்கள் இல்லை. ஆட்டமே வாழ்க்கை. வாழ்க்கையே ஆட்டம். மானுட ஆட்டம்! என்று வாழ்வின் உண்மை நிலைகளைப் புலப்படுத்தியுள்ளார்.

**உரிமை மறுப்பு**

ஒவ்வொரு மனிதனுக்கும் இயல்பான வாழ்வதற்கான உரிமை உண்டு. யாரும் தன்னிச்சையாக அவரின் உயிரை இழத்தல் ஆகாது. இரண்டாண்டு யார் கண்ணிலும் தென்படாத கிருட்டிணன் அச்சு அசல் பெண்ணாகவே மாறிபோய் வந்திருந்தான். இதையறிந்த அண்ணன் சுதாகர், ***"டேய்.... என்ன வந்திருக்காளாம்.... தங்கச்சியாம்... அலித் தாயோலி... ஊரு மேயிற நாயி... எலேய் பொண்டுகா... பாகம் வேணுமா? இவன் மூஞ்சி மொகரக்கட்டைக்கு விவசாயம் பார்க்கப் போறானாம். எங்கெங்கோ நாத்தனது பத்தாதுன்னு தோட்டத்தில நாத்தலாமன்னு வந்திருக்கியா?"***[6] என்று நாக்கைத் துருத்திக் கொண்டு செருப்பைக் கழற்றி எட்டி உச்சந்தலையில் அடித்தான். அடித்து "நான் ஏன்டா ஓடனும் இது என்வீடு. எங்கப்பன் சொல்லட்டும் நான் பிள்ளையில்லனு. அந்த நிமிடமே தூவுன்னு துப்பிட்டுப் போயிடுறேன். எனக்கு இந்த பொறந்த மண்ணுல வாழனுமுன்னு ஆசையிருக்காதா? இங்க எதுக்கு வந்தேன்னு கேக்குறயா? விவசாயம் பார்க்க வந்திருக்கேன். பெரிய மனுசா.. மரியாதையா எம் பாகத்தப் பிரிச்சுவிடு" என்று உணர்வோடு எழுந்த வார்த்தைகள் அவன் பேச்சின் பெண்பாவனையால் சில ஆண்களிடம் வலுவிழந்தது. இவ்வாறு சு.வேணுகோபால் இச்சமூகத்தில் உரிமைகள் எவ்வாறு மறுக்கப்படுகிறது என்பதையும் குறிப்பாக மூன்றாம் பாலினத்தவருக்கு அனைத்து உரிமைகள் மறுக்கப்பட்டு ஒடுக்கப்பட்டவர்களாக மாற்றிட நாமும் ஒரு காரணம் என்பதை தெளிவாக எடுத்துரைத்துள்ளார்.

**முதலாளித்துவம்**

முதலாளிகளின் ஆதிக்க நிலையானது இன்றளவும் சமூகத்தில் காணப்படுகிறது. அதை தமது முதலாளிப் பிள்ளையின் தோட்டங்களில் வேலை தீர்ந்தாலும் பரமனின் தாய்க்கு வேலையிருக்கும். காட்டில் வேலையில்லாத நாட்களிலும் அதிகமாக வேலையிருக்கும். சம்பளம் குறைவென்றாலும் மீதி சாப்பாடு கிடைக்கும். முதலாளி வேலுப்பிள்ளை வாசற்படியில் நின்று "டே ஒங்க ஆத்தா வர்லையாடா" என்கிறார்.

***"மதியம் வந்து பத்துக்கொடம் தண்ணிய அடிச்சுவிட்டுப் போனவதான் வரல. கல்தொட்டிய நெப்பாமலே போயிட்டா. இவளுக்குத்தான் மேகவர்ணபட்டு போடணும்டா. இவ இப்பிடி நரிக்குளிப்பாட்டித்தனமா இருந்தா நல்லா நடக்கும்டா சம்சாரி பொழப்பு.."***

என்று பேச்சில் கோவம் தெறிக்கிறது. அவள் இவள் என்று பேசும்போதெல்லாம் இனி இங்கு வரக்கூடாது என்று பரமுவுக்குத் தோன்றும். அப்படியெல்லாம் இருந்துவிட முடியவில்லை என்று வருத்தம் ஏற்படும். ஒன்பதாம் வகுப்பு படிக்கும் முதலாளியின் பையனும் அம்மாவைப் பெயர் சொல்லித் தான் அழைக்கிறான். அப்பா, அம்மாவை வாடா, போடா, அவ, இவ, அவன்னு பேசுறப்ப மன வருந்துகிறான்.

முதலாளியின் அதிகாரத்தை வெறுத்த பரமு தன் தாய் தந்தையிடம் பலமுறை கேட்டிருக்கிறான். அதற்கு அவர்களோ, ***"பரமு நீ வேணுமன்னா ஒங்காலத்தில் படிச்சு நிமந்து நில்லு. எங்கள மாதிரி பணிந்து கையேந்தி நிற்காம நில்லு. சரியாவும் தெரியல தப்பாவும் தெரியல. அப்படி வளர்ந்திட்டோம். நீ நாலெழுத்து படிச்சிருக்க எங்களுக்கு என்ன தெரியும்"*** என்ற வார்த்தையில் சமாதானம் சொல்வது மூலம் மனிதத் தன்மையற்ற முதலாளித்துவம் இன்றளவும் காணப்படுவதாக கூறுவது புலனாகிறது.

**தொழில்கள்**

சங்க காலத்தில், தமிழகத்தின் தொழில்கள் வேளாண்மைக்குத் துணை புரியும் விதத்திலேயே இருந்தன. இவை குடிசைத் தொழில்களாகவும் ஆலையைச் சார்ந்தவையாக அல்லாமலும் இருந்தன. பல பகுதிகளில் நெற்பயிர் வேளாண்மை ஓங்கியிருந்தது. இதனால் பண்டமாற்று முறையும் வாணிபத்தில் முக்கியத்துவம் பெற்றது. இவ்வகையில் சு.வேணுகோபாலின் படைப்பான நிலம் எனும் நல்லாள் புதினத்தில் விவசாயத்தின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறார்.

குமரனுக்கு விவசாயம்தான் படிப்பு. வகுப்பில் உட்கார வைப்பது மிகவும் கடினம். அப்பாவிற்குப் பயந்துதான் பள்ளிக்கூடத்திற்கே சென்றான். வெள்ளாமைத் தோட்டத்தில் விட்டால் அவனுக்குப் பன்னிரெண்டு மணி நேரம் பத்தாது. சாப்பாடு கூட மறந்துவிடும். வாய்க்காலுக்கு வாய்க்கால் ஊர்ந்து கொண்டிருப்பான். இப்படி நிலம் மீது பற்று கொண்ட குமரன்

***"மண்ணுல் முன்ன மாதிரி சத்திலப்பா. நிலம் கரடு தட்டுப்போச்சு"*** என்று சொல்லிக் கொண்டிருந்தவர்களிடையே குமரன் புகுந்து சூழ்நிலையைப் புரிந்து கொஞ்சம் மாற்றி வைத்த வெள்ளாமை சரியாக அமைந்துவிட்டது. ***"குமரன் கைராசிக்காரன்டா அவனுக்கு அப்பா ராசிடா"***[8] என்று தன் தாய் கூறுவதிலிருந்து பணி அல்லது தொழில் என்பது ஒருவருடைய வாழ்வாதாரத்திற்கு வருமானம் ஈட்டக்கூடிய செயல் என்பது இன்றியமையாததாகும்.

**முடிவுரை**

மனித வாழ்க்கை காலத்திற்கேற்ப சூழ்நிலைக்கேற்ப பல்வேறு மாற்றங்களை அடைந்து வருகின்றது. அவர்களின் பண்புகளும், அவரவர்களின் தகுதிக்கும் ஏற்றாற்போல் மாறுபடுகின்றது. சில மானுட பண்புகள் காலங்காலமாகத் தொடர்ந்து வருகிறது. இத்தகு மாறுபட்ட பண்புகளை ஆசிரியர் சு.வேணுகோபாலின் படைப்புகளின் வழி வெளிப்படுத்தியதை இக்கட்டுரையின் வழி காணலாகிறது எனலாம்.

**சான்றெண் விளக்கம்**

1. *சு.வேணுகோபால், ஆட்டம் (குறுநாவல்), ப.10*
2. *சு.வேணுகோபால், வெண்ணிலை - கிடந்தகோலம் (சிறுகதை), ப.77*
3. *சு.வேணுகோபால், வெண்ணிலை - உள்ளிருந்து உடற்றும் பசி (சிறுகதை), ப.40*
4. *சு.வேணுகோபால், வெண்ணிலை - புத்துயிர்ப்பு (சிறுகதை), ப.118*
5. *சு.வேணுகோபால், ஆட்டம் (குறுநாவல்), ப.36*
6. *சு.வேணுகோபால், பால்கனிகள், ப.36*
7. *சு.வேணுகோபால், பால்கனிகள் - இழைகள் (நாவல்), ப.82*
8. *சு.வேணுகோபால், நிலம் எனும் நல்லாள் (நாவல்), ப.24*

**துணை நூற்பட்டியல்**


1. *காந்தி க., தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், சர்வதேச தமிழாய்வு நிறுவனம், சென்னை 600113.*
2. *பாக்யமேரி.எஃப்., தமிழர் பண்பாடும் பயன்பாடும், அஞ்சனக் கிமிழப் பதிப்பகம், சென்னை 600 004.*
3. *வரலாட்சி இரா., சங்க இலக்கியங்களில் மானிடவியல் கூறுகள், வியாசர்பாடி, சென்னை 600 039.*
4. *வேணுகோபால் சு., பால்கனிகள், தமிழினி அச்சாக்கம், பாவை பிரிண்டர்ஸ் சென்னை 14.*
5. *வேணுகோபால் சு., ஆட்டம், பாவை அச்சாக்கம், பாவை பிரிண்டர்ஸ், சென்னை 14.*

6. *வேணுகோபால் சு., நிலம் எனும் நல்லாள், பாவை அச்சாக்கம், பாவை பிரிண்டர்ஸ், சென்னை 14.*
7. *வேணுகோபால் சு., வெண்ணிலை, பாவை அச்சாக்கம், பாவை பிரிண்டர்ஸ், சென்னை 14.*